மாற்றுத்திறனாளிகள் நலஇயக்குநர்அவர்களின் செயல்முறை ஆணைகள்,
சென்னை–05
பிறப்பிப்பவர்: திரு.கமல் கிஷோர், இ.ஆ.ப.,

செ.மு.ந.க.எண். 9753/நிர்.2/2021 நாள்.04.01.2024

பொருள் : பணியமைப்பு – மாற்றுத்திறனாளிகள் நலஇயக்குநரகம், சென்னை–05 – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் (2015–2016) தொகுதி IV ல் தேர்வு செய்யப்பட்டு, செங்கல்பட்டுமாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் தட்டச்சராகபணிபுரிந்து வரும் திரு. ம.பாஸ்கரன் அவர்களின் பணிப்பதிவேட்டினை தகுதிகாண் பருவம்செய்துஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்,,சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண்.5844/நிர்.2/2017நாள்.01.11.2017.
2. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் சென்னை –5 அவர்களின் செ.மு.ஆ.எண். 5426/ நிர்.2/2020நாள்.21.08.2020.
3. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், செங்கல்பட்டுஅவர்களின்ந.க.எண்.23/2023 நாள்.17.07.2023.

------

ஆணை :

பார்வை 1ல் காணும் 01.11.2017 நாளிட்ட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடுஅரசுபணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி IV ல் தேர்வு செய்யப்பட்டு, தட்டச்சராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, செங்கல்பட்டு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.ம.பாஸ்கரன் என்பவரது பணியினை, பார்வை 2ல் காணும்21.08.2020 நாளிட்ட , இவ்வாணையரக செயல்முறை ஆணையின்படி, தட்டச்சர் பதவியில் சேர்ந்த நாள் 03.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும்பணிவரன்முறை செய்யப்பெற்ற இரண்டாண்டுக்குள் (தகுதிகாண் பருவ காலத்திற்குள்) தமிழ்நாடு அரசுதொழில்நுட்ப கல்வி இயக்கத்தால் நடத்தப்படும் அலுவலக நடைமுறை நூல் (DOM) மற்றும் Certificate Course in Computer on Office Automation தேர்ச்சிப் பெறவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், பணிவரன் முறை செய்யப்பட்டது.மேலும் தனியர் ஜீன் 2016 ஆம் ஆண்டு

Generated by CyberLink U Scanner

நடைபெற்ற Certificate Course in Computer on Office Automation தேர்வில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும் Tamil Nadu Government Office Manual Test ஆகஸ்ட் 2019ல் தேர்ச்சிப் பெற்றுள்ளார். இதுகுறித்த பதிவு தனியரின் பணிப்பதிவேட்டில் தொகுதி 1, பக்கம் எண் 8 மற்றும் 59 ல் பதியப்பட்டுள்ளது. தனியர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தினை 02.11.2019 பிற்பகல் திருப்திகரமாக முடித்துள்ளார் என விளம்பி ஆணையிடப்படுகிறது.

2)தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணிநிபந்தனை ) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28(1)ன்படி, அன்னார் காலமுறை ஊதிய உயர்வு பெறத்தகுதியுடைவராகிறார் என்றும் ஆணையிடப்படுகிறது.

3) தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு செங்கல்பட்டு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு – பணிப்பதிவேடு

(ஒம்/–)ஏ.கே. கமல் கிஷோர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

பெறுநர்
திரு.ம.பாஸ்கரன்,
தட்டச்சர்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள்நல அலுவலகம்,
செங்கல்பட்டு. (மாவட்டமாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மூலமாக)

நகல்

1. மாவட்டமாற்றுத்திறனாளிகள் நலஅலுவலர்,
   மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
   செங்கல்பட்டு மாவட்டம்.
2. மாவட்டகருவூல அலுவலர்,
   மாவட்ட கருவூல அலுவலகம்,
   செங்கல்பட்டு மாவட்டம்.
3. இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி //

certified
நிர்வாக அலுவலர் (பொ)
04.01.24

Generated by CyberLink U Scanner